**பேருவளை பிரதேச சபை - 2023**

---------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பேருவளை பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பேருவளை பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை. | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியமத்தின் பந்தி இலக்கம் 3.27 முதல் 3.32 பந்திக்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | 2024 ஆண்டில் காசு பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்படும். | நியமங்களுக்கு இணங்க காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | நியம இலக்கம் 5.14 பிரகாரம் நிறுவனம் ஒன்றினால் இருப்புக்களை விநியோகித்தல் | - மேற்படி - | - மேற்படி - |

தொடர்பாக பயன்படுத்தப்பட்ட முறைமை மற்றும் இருப்பு பெறுமதி இடல் முறைமை கணக்கீட்டு கொள்கைகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை.

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் ரூபா 19,773,513 கூட்டுத் தொகையான மூலதன செலவினம் மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். | 2024 இன் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி ரூபா 675,000 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 159 ஆம் பிரிவு | நிலுவை ஆதன வரி நிலுவையை அறவிடுதல் இதன் இறுதி படிமுறையாக ஆதனங்கள் தடை செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தொடர்புடைய பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 104(4) | அறிக்கையிடப்பட்ட 06 வாகன விபத்துக்கள் தொடர்பாக 03 மாதங்களுக்குள் | பொறுப்புவாய்ந்த தரப்பினரை இனங்கண்டு அவர்களுக்கு | தொடர்புடைய நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 108 | 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்டிருந்த கெப் வண்டியின் விபத்திற்காக பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு எதிராக இவ்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது பரிசோதனைகள் மேற்கொள்ளப்படு வதுடன் அது முடிவடைந்த பின்னர் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். | - மேற்படி - |
| (iii) | நிதிப்பிரமாணம் 1645 | சபைக்கு சொந்தமான 10 வாகனங்களுக்காக வாகன ஓட்டகுறிப்புகள் தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படும். | - மேற்படி - |
| (iv) | நிதிப்பிரமாணம் 1646 | சபைக்குரிய வாகனங்களின் மாதாந்த பொழிப்பு மற்றும் ஓட்டக்குறிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கபட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,048,882 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,640,489 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **(i)** | ஆதன வரியும் வரியும் | 25,918,429 | 25,600,161 | 34,037,739 | 15,835,000 | 23,854,295 | 29,253,576 | 19.633,435 | 25,754,967 |
| (ii) | வாடகை | 23,255,552 | 19,086,953 | 17,124,743 | 3,848,205 | 22,921,850 | 20,825,028 | 23,330,393 | 5,952,825 |
| **(iii)** | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 4,133,000 | 4,233,205 | 4,184,806 | 793,400 | 4,130,000 | 4,102,000 | 3,893,040 | 898,500 |
| **(iv)** | ஏனைய வருமானம் | - | - | - | - | 100,000,000 | 152,309,224 | 189,838,595 | 115,798,726 |
| | மொத்தம் | 53,306,981 | 48,920,319 | 55,347,288 | 20,476,605 | 150,906,145 | 206,489,828 | 236,695,463 | 148,405,018 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) ஆதனவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டில் டிசம்பர் 31 இல் உள்ளவாறு ஆதன வரி காலப்பகுப்பாய்வின் பிரகாரம் ஒரு ஆண்டிற்கு குறைந்த நிலுவை ரூபா 1,627,484 தொகையும், 01 இற்கும் 03 வருடங்களுக்கிடையிலான நிலுவை ரூபா 5,130,206 தொகையும், 03 இற்கும் 05 இடையிலான நிலுவை ரூபா 2,433,376 தொகையும், 05 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையிலான நிலுவை ரூபா 4,464,338 மற்றும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை ரூபா 2,179,593 ஆகும். | 05 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையிலான மற்றும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை ஆதனங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொண்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ) வாடகை** | | |
| (i) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 5,952,825 ஆன கடை வாடகை நிலுவையில் | நிலுவைத் தொகையில் ரூபா 367,401 அறவிடப்பட்டுள்ளதுடன் | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டின் போது ரூபா 1,908,648 அதாவது 32 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | ரூபா 561,146 பதிவழிப்பதற்கு அங்கீகாரம் உள்ளதுடன் ரூபா 158,375 இற்காக வழக்குத் தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | 03 வருடங்கள் முதல் காணப்படுகின்ற நிலுவை கடை வாடகை ரூபா 689,762 இனை அறவிடுவதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வழக்கு தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| **(இ)** | **ஏனைய வருமானம்** | | |
| | மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும், ஏனைய அதிகாரத் தரப்பினரிடம் இருந்தும் 2023 திசம்பர் 31 இல் கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 39,535,856 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 126,995,067 ஆகும். | பட்டோலைகள் தயாரித்து தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பேருவளை பிரதேசசபையில் கணிசமான அளவில் சேகரிக்கப்படுகின்ற கழிவுப்பொருட்களை அகற்றுவதற்காக நீண்ட கால வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | கூட்டுப்பசளை தளத்தின் அளவின் பிரகாரம் உக்குகின்ற கழிவுப் பொருட்கள் அந்த நிலையத்துக்கு அனுப்பப்படுவதுடன் எஞ்சிய பகுதிகள் தனியார் காணி ஒன்றில் அகற்றப்படுகின்றது. | கழிவுப்பொருட்களை அகற்றுதல் தொடர்பாக உள்ள பிரச்சினைகள் சம்பந்தமாக பொறுப்புவாய்ந்த நிறுவனத்திற்கு அறிவித்து நிலைபேறான தீர்வு பெறப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) பேருவளை பிரதேச சபைக்குரிய மாடு அறுவை கூடத்தில் மாடுகள் சுகாதார ரீதியான பாதுகாப்புடன் அறுப்பதற்காக போதியளவான இடவசதிகள் காணப்படவில்லை. | குறைபாடுகளை தயாரிப்பதற்கு நிதி ஏற்பாடுகள் இல்லாமை தாமதமடைந்துள்ளது. எதிர்காலத்தில் போதிய அளவான இடவசதிகள் நிர்மாணிக்கப்படும். | சுகாதார பாதுகாப்பான முறைமையின் கீழ் பணிகள் நிறைவேற்றப்படல் வேண்டும். |
| (இ) மாடு அறுவைக் கூடத்திற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அனுமதிப் பத்திரம் பெறப்படாத இருந்ததுடன் அதில் நீர். முறையாக அகற்றுவதற்கான திட்டமுறைமை ஒன்று காணப்படமையினால் கழிவு நீர் காணிக்கு அடுத்தாற்போல் உள்ள பெந்தர ஆற்றில் கலந்திருந்தது. | மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்கு பெற்றுக் கொள்வதற்கு எடுக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது குறைபாடுகள் காணப்படுவதுடன் அவற்றை எதிர்காலத்தில் சரிசெய்து செய்து பிரச்சினைகள் தீர்க்கப்படும். | சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திட்டமிடல் குழு ஒன்று ஒரே தினத்தில் ஒரே நேரத்தில் நடத்தி இருக்கும் போது உப அலுவலக மட்டத்தில் கையொப்பம் 05 ஆவணங்களில் தயாரிக்கப்பட்டு 05 குழுக்கள் பங்குபற்றியதாக கருதி 2022 டிசம்பர் 06 ஆம் திகதி முதல் 2023 யூன் 30 வரையான காலப்பகுதிக்கு உரியதாக செலுத்த வேண்டிய தொகையினை விஞ்சி படிகளாக ரூபா 484,000 செலுத்தப்பட்டிருந்தது. | ரூபா 76,500 அறவிடப்பட்டுள்ளதுடன் மிகுதி பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சபை நிதியம் உரியவாறு செலவிடப்படல் வேண்டும். |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை அதிகாரப் பிரதேசத்தில் சுற்றுலாச் சபையின் கீழ் பதிவு. சபையின் கீழ் பதிவு செய்துள்ள ஹோட்டல்களின் எண்ணிக்கை தொடர்பான எந்தவொரு ஆய்வும் மேற்கொள்ளப்படாமல் 24 ஹோட்டல்களில் இருந்து மாத்திரம் வரி அறவிடப்பட்டிருந்தது. | அந்த ஹோட்டல்களில் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அனுமதிப்பத்திர கட்டணம் அறவிடப்பட்டுள்ளதுடன், சுற்றுலா சபையின் தகவல் சபையிலிருந்து தகவல்கள் கோரப்பட்டுள்ளது. | பதிவு செய்துள்ள ஹோட்டல்கள் தொடர்பாக ஆய்வை மேற்கொண்டு வரி அறவிடப்படல் வேண்டும். |

### 3.4 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான டெக்டர் வண்டி 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் பழுதுபார்க்கப்படாமல் பயனற்று காணப்பட்டது. | இலக்கம் RD - 9469 என்ற தொடர் வண்டி பொறியியலாளர் அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கு அனுப்ப பட்டுள்ளதுடன், ஏனைய 03 கை உழவு இயந்திரங்கள் தற்போது பழுதுபார்க்கும் நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளது. | சொத்துக்களை செயற்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மேல் மாகாண சபையின் இலிருந்து நன்கொடையாக கிடைக்கப்பெற்ற JOHN DEER கரையோர சுத்திகரிக்கும் வாகனம் 2017 ஒக்டோபர் 13 ஆம் திகதி இலிருந்து ஓட்ட நிலைமையில் காணப்படாதிருந்ததுடன், 2018 ஆம் ஆண்டு முதல் ப்பதற்காக தனியார் நிறுவனத்துக்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும், 2023 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அது சபைக்கு | அரசாங்க வாகனத்தின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளில் 75 சதவீதம் தற்போது முடிவடைந்துள்ளமையால் முழுமையாக பழுதுபார்த்தல் முடிவடைந்தவுடன் ஓட்டத்தில் சேர்ப்பதற்கு தீர்மானிக்கபட்டுள்ளது. | பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் காலரீதியில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கையளித்து ஓட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) சபை பயன்படுத்துகின்ற 10 வாகனங்கள் சபைக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அந்த வாகனங்களின் உரித்தினை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வாகனங்களை உரிய பிரகாரம் கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.6 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| டோனர் பெறுகையின்போது ஆகக்குறைந்த கேள்வி நிராகரிக்கப்பட்டு அதிக விலை கொள்வனவு செய்யப்பட்டமையால் சபைக்கு ரூபா 316,560 தருவது நிதி ரீதியான நட்டம் ஏற்பட்டிருந்தது. | இரண்டு நிபந்தனைகளின் பிரகாரம் தொழில்நுட்ப குழு இதனை பரிந்துரை செய்திருந்தது. | தேசிய பெருகைகள் வழிகாட்டி. கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.7 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக மலசலகூடத்தை அமைக்கும் செயற்திட்டத்தின் போது மாவட்ட விலை குழுவினால் கொங்கிறீட் கல் இற்காக குறித்துரைக்கப்பட்ட விலையினை விஞ்சி செலுத்தப்பட்டமையால் ரூபா 208,000 நட்டம் ஏற்பட்டிருந்தது. | சந்தையில் காணப்பட்ட விலை எண்ணிக்கைகளின் பிரகாரம் பொருட்கள் கொள்வனவு செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது. | ஏற்பட்ட நட்டத்தை பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடல் வேண்டும். |

## 3.8 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையில் சேவையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற, மரணமடைந்த 06 உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ஊழியர் கடன் ரூபா 1,036,338 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இந்த தொகை ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து அறவிடுவதற்காக ஓய்வூதிய திணைக்களத்திற்கு அறிவிக்கபட்டுள்ளது. | விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |